செ.கு. எண்: 356

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 4.10.2012

காஞ்சிபுரம் மாவட்டம், பொத்தேரி அருகே 27.9.2012 அன்று தாம்பரத்திலிருந்து வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து, ஆட்டோ மீது மோதியதில், ஆட்டோவில் பயணம் செய்த செங்கல்பட்டு வட்டம் வல்லாஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் திரு. ரமேஷ் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கல்லணை கிராமம், அலங்காநல்லூர் - மதுரை ரோட்டில், 28.9.2012 அன்று மதுரையிலிருந்து வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து, இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில், அதில் பயணம் செய்த அம்பலத்தடி கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில் என்பவர் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

இந்த இரு சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த ரமேஷ் மற்றும் செந்தில் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான திரு. ரமேஷ் மற்றும் திரு. செந்தில் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்